## சாதாரண கூட்டம்

**கூத்தாநல்லூர் நகராட்சியின் 2020ம் ஆண்டு அக்டோபர் மாதம் 29ம் நாள் வியாழக்கிழமை முற்பகல் 12.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்**

<table>
<tr><th>மன்றக்கூட்டம் நடைபெற்ற நாள்</th><th>வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள்</th><th>மன்றத்தின் தீர்மானம்</th></tr>
<tr><td>29.10.2020</td><td>பொருள் எண் 1<br>நகராட்சி ஆணையர் அவர்களது செப்டம்பர் 2020 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது<br>அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1)</td><td>தீர்மானம் எண்:- 772 ஏற்கப்பட்டது</td></tr>
<tr><td>29.10.2020</td><td>பொருள் எண் 2<br>நகராட்சி பொறியாளர் அவர்களது செப்டம்பர் 2020 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது<br>அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1)</td><td>தீர்மானம் எண்:- 773 ஏற்கப்பட்டது</td></tr>
<tr><td>29.10.2020</td><td>பொருள் எண் 3<br>இந்நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு டெங்கு காயச்சல் தடுப்பு பணிகளுக்காக 23 பணியாளர்கள் நியமிக்க இந்நகர் மன்ற தீர்மான எண் 769 நாள் 30.09.2020ன்படி அனுமதிக்கப்பட்டு 21.10.2020 அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீட்டு தொகை (ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு)</th><th>ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள தொகை</th></tr>
<tr><td>1</td><td>தி கரன் சமூக தொண்டு நிறுவனம் மன்னார்குடி</td><td>532</td><td>531.75</td></tr>
<tr><td>2</td><td>ஸ்ரீ மாதா சோசியல் டெவலப்மெண்ட் பவுன்டேஷன் மன்னார்குடி</td><td>532</td><td>533.00</td></tr>
</table>
மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள தி கரன் சமூக தொண்டு நிறுவனம் மன்னார்குடி நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.(ந.க.எண். 591/2020/இ1)</td><td>தீர்மானம் எண்:- 774 ஏற்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 29.10.2020 | **பொருள் எண் 4**<br>கொரோனா நோய் தொற்று தடுப்பு பணி காரணமாக பிறப்பிக்கப்பட்ட பொது ஊரடங்கு காலத்தில் 01.04.2020 முதல் 31.05.2020 வரை உள்ள காலத்திற்கு உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படாத கடைகள் /வரியில்லா இனங்களுக்கு வாடகை தொகையினை செலுத்துவதிலிருநது விலக்கு அளித்து உத்தரவிடப்பட்டுள்ள அரசாணை எண் 298 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 02.09.2020ன் நகல் நகர்மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்காகவும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 161/2020/சி1) | **தீர்மானம் எண்:- 775 ஏற்கப்பட்டது** |

| 29.10.2020 | **பொருள் எண் 5**<br>உலகளாவிய கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கை காரணமாக 24.03.2020 முதல் முழு ஊரடங்கு மாநில அரசால் அமல்படுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து அரசாணை எண் 298 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 02.09.2020 உள்ளாட்சி அமைப்புகளின் குத்தகை இனங்களின் செயல்படாத குத்தகை இனங்களுக்கு 01.04.2020 முதல் 30.05.2020 வரை காலத்திற்கான கடைகள்/வரியில்லா இனங்களின் கேட்பினை தள்ளுபடி செய்திட அரசாணை வெளியிடப்பட்டது. மேற்படி அரசாணையின்படி கூத்தாநல்லூர் நகராட்சியில் உள்ள குத்தகை இனங்கள் மற்றும் கடைகளில் முழு ஊரடங்கு காலமான 01.04.2020 முதல் 31.05.2020 வரை செயல்படாத கத்தகை இனங்கள்/கடைகள் கேட்பினை தள்ளுபடி செய்ய வேண்டிய ஓராண்டு மற்றும் மூன்றாண்டு குத்தகை இனங்களின் விபரங்கள் பின்வருமாறு | **தீர்மானம் எண்:- 776 ஏற்கப்பட்டது** |
|---|---|---|

**ஓராண்டு குத்தகை இனங்கள்**

| வ. எண் | செயல்படாத குத்தகை இனத்தின் பெயர் | வரிவிதிப்பு எண் | ஆண்டு கேட்பு | ஒரு மாதத்திற்கான கேட்பு | 01.04.2020 முதல் 31.05.2020 வரை கேட்பு |
|---|---|---|---|---|---|
| 1 | சென்ட்ரல் மார்க்கெட் ஆடு அறுக்கும் தொட்டி | 101/2019/000001 | 1,15,762/- | 9,647/- | 19,294/- |
| 2 | சென்ட்ரல் மார்க்கெட் மீன் அங்காடி கட்டண வசூல் | 101/2019/000002 | 1,05,840/- | 8,820/- | 17,640/- |
| | **கூடுதல்** | | **221602** | **18467** | **36394** |

**மூன்றாண்டு குத்தகை இனங்கள்**

| வ. எண் | செயல்படாத குத்தகை இனத்தின் பெயர் | வரிவிதிப்பு எண் | ஆண்டு கேட்பு | ஒரு மாதத்திற்கான கேட்பு | 01.04.2020 முதல் 31.05.2020 வரை கேட்பு |
|---|---|---|---|---|---|
| 1 | JVT Shop No 1 | 101/2019/0000010 | 25,200/- | 2,100/- | 4,200/- |
| 2 | JVT Shop No 2 | 101/2019/0000011 | 25,200/- | 2,100/- | 4,200/- |
| 3 | JVT Shop No 3 | 101/2019/0000012 | 25,200/- | 2,100/- | 4,200/- |
| | **கூடுதல்** | | **75,600/-** | **6,300/-** | **12,600/-** |

மேற்கண்டுள்ள பட்டியலில் உள்ள குத்தகை இனங்கள் 01.04.2020 முதல் 31.05.2020 வரை முழு ஊரடங்கு காலத்தில் செயல்படாத குத்தகை இனங்களில் 2 மாத கேட்பினை தள்ளுபடி செய்திட நகர்மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 29.09.2020ந் தேதிய ந.க.எண். 8763/2020/ஆர்2 கடிதத்தில் வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி 01.04.2020 முதல் 31.05.2020 முடிய செயல்படாத கடைகள்/வரியில்லா இனங்களை ஆய்வு செய்து உறுதி செய்திட நகராட்சி அலுவலர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட குழுவினரால் தள்ளுபடி செய்யப்பட வேண்டிய தொகை ரூ.49,534/- உறுதி செய்யப்பட்டுள்ளது.

எனவே மேற்குறிப்பிட்ட செயல்படாத கடைகள்/வரியில்லா இனங்களின் 01.04.2020 முதல் 31.05.2020 வரை உள்ள இரண்டு மாத காலத்திற்குரிய கேட்பு தொகை ரூ.49,534/- தள்ளுபடி செய்திடலாம்.

(ந.க.எண். 161/2020/சி1)

29.10.2020

**பொருள் எண் 6**

இந்நகராட்சி தூய்மை பணியாளர்களுககு 2020-21ம் ஆண்டுக்குரிய சீருடைகள் வழங்குவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் செனனை அவர்களின் கடித ந.க.எண். 25480/ஜெ2/2015 நாள் 13.06.2016ன்படி தமிழ்நாடு டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷன் கோயம்புத்தூர் என்ற நிறுவனத்திடமிருந்து வாங்கிக் கொள்ளவும் அதற்கான தையல்கூலி மற்றும் இதர செலவினங்களுக்கும் ஆகும் உத்தேச செலவினம்

ரூ. 70,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். 2514/2017/எச்1)

**தீர்மானம் எண்:- 777 ஏற்கப்பட்டது**

| | | |
|---|---|---|
| 29.10.2020 | **பொருள் எண் 7**<br>இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் முக்கிய பணிகளான கால்வாய் சுத்தம் செய்தல், மழைநீர் வடிகால் சுத்தம் செய்தல், டெங்கு ஒழிப்பு பணிகள், குப்பை தரம் பிரிக்கும் பணிகள் போன்றவற்றிற்கு கீழ்கண்டுள்ள பொருட்கள் அத்தியாவசியமாக தேவைப்படுகின்றது.<br>**தேவைப்படும் பொருட்களின் விபரம்**<br>1. மண்வெட்டி 20<br>2. அன்னகூடை 32<br>3. ஜாடி 25<br>4. கைமாறு 100<br>5. அரிவாள் 20<br>6. அலக்கு அரிவாள் 20<br>7. சாக்கடை கரண்டி 20<br>8. முள் கொக்கி 20<br>9. கடப்பாறை 5<br>10. கால்வாய் பார்க்கும் கொக்கி 20<br>மேற்படி தளவாட பொருட்களை அவசர அவசியம் கருதி வாங்க ஆகும் ரூபாய் 85,000/-க்கு பொதுநிதியிலிருந்து பயன்படுத்திக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 456/2019/எச்1) | **தீர்மானம் எண்:- 778 ஏற்கப்பட்டது** |
| 29.10.2020 | **பொருள் எண் 8**<br>இந்நகராட்சி 2019-2020 ஆம் ஆண்டு வருவாய் நிதி, மூலதன நிதி கணக்குகள் மற்றும் குடிநீர் வடிகால் நிதி கணக்குகளின் வரவு செலவு திட்ட கணக்கு மற்றும் ஆண்டுக்கணக்குககளை தயார் செய்து உள்ளாட்சி நிதி தணிக்கை துறை திருவாரூர், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அலுவலகங்களுக்கு அனுப்பிட வேண்டியுள்ளதால், மேற்படி 2019-2020 ஆம் ஆண்டிற்கு தயார் செய்யப்பட்ட ஆண்டுக் கணக்குகளுக்கு தனியார் பட்டய கணக்கர் நிறுவனம் மூலம் கணக்குகள் சரி பார்க்கப்பட்டு சான்றிதழ் பெறுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண். 2508/2020/பி1) | **தீர்மானம் எண்:- 779 ஏற்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| 29.10.2020 | **பொருள் எண் 9**<br>தூய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மத்திய அரசின் நகர்புற மேம்பாட்டு அமைச்சகத்தால் குப்பை இல்லா நகரத்திற்கான நட்சத்திர மதிப்பீடு ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வழங்கி வரப்படுகிறது. எனவே இந்நகராட்சியினை நட்சத்திர மதிப்பீடு பெற நகராட்சி பகுதியில் உள்ள சுய உதவிக்குழுக்கள், வணிக நிறுவனங்கள், பள்ளிகள், உணவு தயாரிக்கும் இடங்கள், முக்கிய நபர்கள் போன்றவர்களிடம் வார்டு வாரியாக சுய மதிப்பீடு சான்றிதழ்கள் பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இந்நகராட்சியினை ஒரு நட்சத்திர மதிப்பு என சுய அறிவிப்பு செய்யவும் இது குறித்து பொதுமக்களின் ஆட்சேபணைகள் மற்றும் ஆலோசனைகள் பெற தினசரி நாளிதழில் செய்தி வெளியிடவும் ஆகும உத்தேச செலவினம் ரூ.10,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண். 221/20202/எச்1) | **தீர்மானம் எண்:- 780 ஏற்கப்பட்டது** |
| 29.10.2020 | **பொருள் எண் 10**<br>இந்நகராட்சி பகுதியில் தெருநாய்கள் அதிகமாக திரிவதால் சிறு குழநதைகள் முதல் பெரியவர்கள் வரை அச்சத்தில் உள்ளனர். மேலும் வாகன ஓட்டிகளையும் துரத்துவதால் பல விபத்துக்கள் ஏற்படுகிறது. மேலும் ஒரு சில நாய்கள் வெறிபிடித்து கடிப்பதால் வெறிநாய்கடி நோய் பரவ வாய்ப்புள்ளது. எனவே இந்நகர் பகுதியில் தோராயமாக உள்ள 267 நாய்களையும் பிடித்து இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்தும் அறுவை சிகிச்சை மேற்கொள்ளவும், வெறிநாயாக மாறாமல் தடுக்கும் தடுப்பு ஊசி போடவும் விலங்குகள் நல வாரியத்தின் அனுமதி பெற்ற பீப்பிள் பார் அனிமல்ஸ் கும்பகோணம் என்ற தொண்டு நிறுவனத்திற்கு மேற்படி பணியினை வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 1.00.000 /- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண். 718/2020/எச்1) | **தீர்மானம் எண்:- 781 ஏற்கப்பட்டது** |

<table>
<tr>
<td>29.10.2020</td>
<td>
பொருள் எண் 11<br>
இந்நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளுக்காக பைரித்திரியம் 40 லிட்டர், அபேட் மருந்து 40 லிட்டர் மற்றும் சிறிய புகைபோக்கி இயந்திரத்திற்கு தேவையான எரிவாயு சிலிண்டர் 80 எண்ணிக்கை வாங்கும் பணிக்கு 28.10.2020 அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்தபுள்ளிதாரர் பெயர்</th><th>பொருட்களின் பெயர்</th><th>ஒப்பந்தபுள்ளி தொகை (ஒரு லிட்டருக்கானது)</th></tr>
<tr><td rowspan="3">1</td><td rowspan="3">NR Traders Coimbatore</td><td>பைரித்திரியம்</td><td>1100</td></tr>
<tr><td>அபேட்</td><td>1400</td></tr>
<tr><td>எரிவாயு சிலிண்டர்</td><td>290</td></tr>
<tr><td rowspan="3">2</td><td rowspan="3">அமுதா ஏஜென்சீஸ் Coimbatore</td><td>பைரித்திரியம்</td><td>1300</td></tr>
<tr><td>அபேட்</td><td>1600</td></tr>
<tr><td>எரிவாயு சிலிண்டர்</td><td>310</td></tr>
</table>
மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள NR Traders Coimbatore என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு<br>
குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.. (ந.க.எண். /2020/இ1)
</td>
<td>தீர்மானம் எண்:-<br>782 ஏற்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>29.10.2020</td>
<td>
பொருள் எண் 12<br>
இந்நகராட்சி பொதுப்பிரிவில் இயங்கி வரும் TN 50 U 2453 ஈப்பு வாகனத்தில் ஏற்கனவே பயன்பாட்டில் இருந்து வந்த 4 எண்ணிக்கையிலான டயர்கள் மிகவும் பழுதாகியும், வாகனப் போக்குவரத்துக்கு உபயோகமற்ற நிலையில் உள்ளதாலும், அதில் பயன்படுத்தப்பட்டு வந்த டயர் வாங்கப்பட்டு சுமார் 2 வருடங்களுக்கு மேல் ஆனதாலும், எதிர்வரும் வடகிழக்கு பருவமழை மற்றும் சட்டமன்ற தேர்தல் போன்ற அத்தியாவசிய பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்படி வாகனத்திற்கு புதிய நான்கு டயர்கள் வாங்கி பொருத்தவும் வாகனத்தில் கூடுதலாக ஆயில் சர்வீஸ் மற்றும் இதர பழுதுகள் மேற்கொள்ளவும் ஆகும் உத்தேச செலவினம்<br>
ரூ.60,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்<br>
2. பொது நிதியில் மேற்கொள்ளலாம்.<br>
(ந.க.எண். 964/2020/இ1)
</td>
<td>தீர்மானம் எண்:-<br>783 ஏற்கப்பட்டது</td>
</tr>
</table>

ஆணையர் / தனி அலுவலர்
கூத்தாநல்லூர் நகராட்சி